**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 68/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திருமதி. தெய்வானை |
| Husband/Father Name | லட்சுமணன் |
| Village /Area | மகேந்திரவாடி |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 52 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 15.09.2025.

**(எதிரிகள் 2 முதல் 5 வரை ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இறந்த சக்திவேல் என்னுடைய மகன் ஆவார். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு எனது ஊர்காரர்கள் அருள், கணேஷ் மற்றும் மூவர் எனது மகனை அருள் என்பவர் என் மகனை தலை மீது வெட்டினார். தினேஷ் என்பவர் கையில் வெட்டினார். மற்றவர்கள் கல்லாலும் கொம்பாலும் எனது மகனை தாக்கியுள்ளார்கள். எனது மகனை அடித்து போட்டு விட்ட பிறகு எனக்கு தகவல் கிடைத்தது. எனது மருமகன் செந்தில் குமார் என்பவர் எனக்கு தகவல் கூறினார். அதன் பிறகு என்னுடைய மகனை ஆம்புலன்ஸில் ஏற்றி எனது மருமகன் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். எனது மகனை ஆம்புலன்ஸில் ஏற்றும் போது எனது மகன் இறந்துவிட்டதாக எனது மருமகன் கூறினார். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது எனது மகன் இறந்து விட்டதாக கூறினார்கள். இது சம்மந்தமாக

போலீசார் வழக்கு பதிவு செய்து என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**</u>

17.12.2021 அன்று சம்பவம் நடந்து எனது மகன் இறந்து விட்ட செய்தி எனது மருமகன் எனக்கு கூறி தான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு இடது காலை இழந்து விட்டதால் ஊன்று கோலின் உதவியோடு தான் நடக்க முடியும் என்று சொன்னால் அவர் எப்போதும் உட்காந்து கொண்டு தான் இருப்பார் ஒருவர் தூக்கி சென்று தான் உட்கார வைக்க வேண்டும் அது போல் இறக்குவதற்கும் ஒருவரின் உதவியுடன் தான் இறங்குவார். இயற்கை உபாதைகளை நிறைவேற்றுவதற்கும் ஒருவரின் உதவியுடன் தான் செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான். எனது மகனாலட ஜே.சி.பி வண்டியை ஓட்ட முடியாது என்று சொன்னால் சரிதான். எனது மகனை வெட்டியது குத்தியது பற்றி எனது மருமகன் தான் என்னிடம் கூறிய பிறகு தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.15 17:49:59 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.